**வகுப்பு : 12**

# அடைவுத் தேர்வு - 2023-24

Time : 1.30 Hrs

## இயற்பியல்

மொத்த மதிப்பெண்கள் : 100

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

1. பின்வரும் மின்துகள் நிலையமைப்புகளில் எது சீரான மின்புலத்தை உருவாக்கும்.
அ) புள்ளி மின்துகள் ஆ) சீரான மின்னூட்டம் பெற்ற முடிவிலா சமதளம்
இ) சீரான மின்னூட்டம் பெற்ற முடிவிலா சமதளம் ஈ) சீரான மின்னூட்டம் பெற்ற கோளகக் கூடு

2. $2\times10^5$ $NC^{-1}$ மதிப்புள்ள மின்புலத்தில் $30^\circ$ ஒருங்கமைப்பு கோணத்தில் மின் இருமுனை ஒன்று வைக்கப்பட்டுள்ளது. அதன்மீது செயல்படும் திருப்பு விசையின் மதிப்பு 8 Nm. மின் இருமுனையின் நீளம் 1 cm எனில் அதிலுள்ள ஒரு மின்துகளின் மின்னூட்ட எண்மதிப்பு
அ) 4 mc ஆ) 8 mc இ) 5 mc ஈ) 7 mc

3. q1 மற்றும் q2 ஆகிய நேர்மின்னூட்ட அளவு கொண்ட இரு ஒரே மாதிரியான மின்கடத்துப் பந்துகளின் மையங்கள் 'r' இடைவெளியில் பிரிக்கப்பட்டு உள்ளன. அவற்றை ஒன்றோடொன்று தொடச் செய்து விட்டு பின்னர் அதே இடைவெளியில் பிரித்து வைக்கப்படுகின்றன எனில் அவற்றிற்கு இடையேயான விசை
அ) முன்பை விடக் குறைவாக இருக்கும் ஆ) அதேயளவு இருக்கும்
இ) முன்பைவிட அதிகமாக இருக்கும் ஈ) சுழி

4. வெளிப்பரப்பின் ஒரு பகுதியில் மின்புலம் $\vec{E}=10x\,\hat{i}$ நிலவுகிறது. $V_0$ என்பது ஆதிப்புள்ளியில் மின்னழுத்தம், $V_A$ என்பது x = 2 m தொலைவில் மின்னழுத்தம் எனில் மின்னழுத்த வேறுபாடு $V = V_0 - V_A$ இன் மதிப்பு
அ) 10 V ஆ) – 20 V இ) +20 V ஈ) – 10 V

5. A மற்றும் B ஆகிய இரு புள்ளிகள் முறையே 7V மற்றும் -4V மின்னழுத்தத்தில் வைக்கப்பட்டுள்ளன எனில் A லிருந்து B க்கு 50 எலக்ட்ரான்களை நகர்த்தச் செய்யப்படும் வேலை
அ) $8.80\times10^{-17}$ J ஆ) $-8.80\times10^{-17}$ J இ) $4.40\times10^{-17}$ J ஈ) $5.80\times10^{-17}$ J

6. ஒரு மின்தேக்கிக்கு அளிக்கப்படும் மின்னழுத்த வேறுபாடு V லிருந்து 2V ஆக அதிகரிக்கப்படுகிறது எனில், பின்வருவனவற்றில் சரியான முடிவைத் தேர்ந்தெடுக்க.
அ) Q மாறாமலிருக்கும், C இரு மடங்காகும் ஆ) Q இரு மடங்காகும், C இரு மடங்காகும்
இ) C மாறாமலிருக்கும், Q இரு மடங்காகும் ஈ) Q மற்றும் C இரண்டுமே மாறாமலிருக்கும்

7. இணைத்தட்டு மின்தேக்கி ஒன்று V மின்னழுத்த வேறுபாட்டில் Q அளவு மின்னூட்டம் கொண்ட மின்துகள்களை சேமிக்கிறது. தட்டுகளின் பரப்பளவும், தட்டுகளுக்கிடையேயான தொலைவும் இருமடங்கானால், பின்வருவனவற்றுள் எந்த அளவு மாறுபடும்
அ) மின்தேக்குத்திறன் ஆ) மின்துகள் இ) மின்னழுத்தவேறுபாடு ஈ) ஆற்றல் அடர்த்தி

8. 1 cm மற்றும் 3 cm ஆரமுள்ள இரு உலோக கோளங்களுக்கு முறையே $-1\times10^{-2}$ C மற்றும் $5\times10^{-2}$ C அளவு மின்னூட்டங்கள் கொண்ட மின்துகள்கள் அளிக்கப்படுகின்றன. இவ்விரு கோளங்களும் ஒரு மின்கடத்து கம்பியினால் இணைக்கப்பட்டால் பெரிய கோளத்தில், இறுதியாக இருக்கும் மின்னூட்ட மதிப்பு
அ) $3\times10^{-2}$ C ஆ) $4\times10^{-2}$ C இ) $1\times10^{-2}$ C ஈ) $2\times10^{-2}$ C

9. ஒரு ரொட்டி சுடும் மின்இயந்திரம் 240 V இல் செயல்படுகிறது, அதன்மின்தடை 120 Ω எனில் அதன்திறன்
அ) 400 W ஆ) 2W இ) 480 W ஈ) 240 W

10. ஒரு கார்பன் மின்தடையாக்கியின் மின்தடைமதிப்பு $(47 \pm 4.7)$ kΩ எனில் அதில் இடம்பெறும் நிறவளையங்களின் வரிசை
அ) மஞ்சள் – பச்சை – ஊதா – தங்கம் ஆ) மஞ்சள் – ஊதா – ஆரஞ்சு – வெள்ளி
இ) ஊதா – மஞ்சள் – ஆரஞ்சு – வெள்ளி ஈ) பச்சை – ஆரஞ்சு – ஊதா – தங்கம்

11. ஒரே நீளமும் மற்றும் ஒரே பொருளால் செய்யப்பட்ட A மற்றும் B என்ற இரு கம்பிகள் வட்ட வடிவகுறுக்கு பரப்பையும் கொண்டுள்ளன. $R_A = 3R_B$ எனில் A கம்பியின் ஆரத்திற்கும் B கம்பியின் ஆரத்திற்கும் இடைப்பட்ட தகவு என்ன?
அ) 3 ஆ) $\sqrt{3}$ இ) $1/3$ ஈ) $1/\sqrt{3}$

12. 230 V மின்னழுத்த மூலத்துடன் இணைக்கப்பட்ட கம்பியில் திறன் இழப்பு $P_1$. அக்கம்பியானது இரு சமமான பகுதிகளாக வெட்டப்பட்டு இரு துண்டுகளும் பக்க இணைப்பில் அதே மின்னழுத்த மூலத்துடன் இணைக்கப்படுகின்றன. இந்நிலையில் திறன் இழப்பு $P_2$ எனில் $P_2/P_1$ என்றும் விகிதம்
அ) 1 ஆ) 2 இ) 3 ஈ) 4

13. இந்தியாவில் வீடுகளின் பயன்பாட்டிற்கு 220 V மின்னழுத்த வேறுபாட்டில் மின்சாரம் அளிக்கப்படுகிறது. இது அமெரிக்காவில் 110 V அளவு என அளிக்கப்படுகிறது. இந்தியாவில் பயன்படுத்தப்படும் 60 W மின்விளக்கின் மின்தடை R எனில், அமெரிக்காவில் பயன்படுத்தப்படும் 60 W மின்விளக்கின் மின்தடை
அ) R ஆ) 2R இ) R/4 ஈ) R/2

14. ஒரு பெரிய கட்டிடத்தில், 40 W மின்விளக்குகள் 15, 100 W மின்விளக்குகள் 5, 80 W மின்விசிறிகள் 5 மற்றும் 1 kW மின்சூடேற்றி 1 ஆகியவை இணைக்கப்பட்டுள்ளன. மின்மூலத்திதின் மின்னழுத்தம் 220 V எனில் கட்டிடத்தின் மைய மின் உருகியின் அதிக பட்ச மின்னோட்டம் தாங்கும் அளவு
அ) 14 A ஆ) 8 A இ) 10 A ஈ) 12 A

15. ஒரு கம்பியின் வெப்பநிலை மின்தடை எண் 0.00125/°C. 20°C வெப்பநிலையில் கம்பியின் மின்தடை 1 Ω எனில் எந்த வெப்பநிலையில் அதன் மின்தடை 2Ω ஆகும்?
அ) 800°C ஆ) 700°C இ) 850°C ஈ) 820°C

16. 2.1 V மின்கலமானது 10Ω மின்தடை வழியே 0.2 A மின்னோட்டத்தை செலுத்தினால் அதன் அகமின்தடை
அ) 0.2Ω ஆ) 0.5Ω இ) 0.8Ω ஈ) 1.0Ω

17. ஒரு தாமிரத்துண்டு மற்றும் மற்றொரு ஜெர்மானியத்துண்டு ஆகியவற்றின் வெப்பநிலையானது அறை வெப்பநிலையிலிருந்து 80 K வெப்பநிலைக்கு குளிர்விக்கப்படுகிறது.
அ) இரண்டின் மின்தடையும் அதிகரிக்கும் ஆ) இரண்டின் மின்தடையும் குறையும்
இ) தாமிரத்தின் மின்தடை அதிகரிக்கும், ஜெர்மானியத்தின் மின்தடை குறையும்
ஈ) தாமிரத்தின் மின்தடை குறையும், ஜெர்மானியத்தின் மின்தடை அதிகரிக்கும்

18. ஜீலின் வெப்பவிதியில், R மற்றும் t மாறிலிகளாக உள்ளது. H ஐ y அச்சிலும் $I^2$ ஐ x அச்சிலும் கொண்டு வரையப்பட்ட வரைபடம் ஒரு
அ) நேர்க்கோடு ஆ) பரவளையம் இ) வட்டம் ஈ) நீள்வட்டம்

19. செங்குத்தாக செயல்படும் காந்தபுலத்தில் $(\vec{B})$ உள்ள, q மின்னூட்டமும் m நிறையும் கொண்ட துகளொன்று V மின்னழுத்த வேறுபாட்டால் முடுக்கப்படுகிறது. அத்துகளின் மீது செயல்படும் விசையின் மதிப்பு என்ன?
அ) $\sqrt{\frac{2q^3BV}{m}}$ ஆ) $\sqrt{\frac{q^3B^2V}{2m}}$ இ) $\sqrt{\frac{2q^3B^2V}{m}}$ ஈ) $\sqrt{\frac{2q^3BV}{m^3}}$

20. 5 cm ஆரமும், 50 சுற்றுகளும் கொண்ட வட்டவடிவக் கம்பிச்சுருளின் வழியே 3 ஆம்பியரின் மின்னோட்டம் பாய்கிறது. அக்கம்பிச்சுருளின் காந்த இருமுனைத் திருப்புத்திறனின் மதிப்பு என்ன?
அ) 1.0 $Am^2$ ஆ) 1.2 $Am^2$ இ) 0.5 $Am^2$ ஈ) 0.8 $Am^2$

21. சமதளசுருள் (Plane Spiral) ஒன்றின் சுற்றுகளின் எண்ணிக்கை N=100. நெருக்கமாக சுற்றப்பட்ட சுற்றுகளின் வழியே I = 8 mA அளவு மின்னோட்டம் பாய்கிறது. கம்பிச்சுருளின் உட்புற மற்றும் வெளிப்புற ஆரங்கள் முறையே a = 50 mm மற்றும் b = 100 mm எனில், சுருளின் மையத்தில் ஏற்படும் காந்தத்தூண்டலின் மதிப்பு
அ) 5 µT ஆ) 7 µT இ) 8 µT ஈ) 10 µT

22. சமநீளமுடைய மூன்று கம்பிகள் வளைக்கப்பட்டு சுற்றுகளாக மாற்றப்பட்டுள்ளன. ஒன்று வட்ட வடிவிலும் மற்றொன்று அரை வட்ட வடிவிலும் மூன்றாவது சதுரவடிவிலும் உள்ளன. மூன்று சுற்றுகளின் வழியாகவும் ஒரே அளவு மின்னோட்டம் செலுத்தப்பட்டு சீரான காந்தப்புலம் ஒன்றில் வைக்கப்பட்டுள்ளன. மூன்று சுற்றுகளின் எந்த வடிவமைப்பில் உள்ள சுற்று பெரும திருப்பு விசையை உணரும்?
அ) வட்ட வடிவம் ஆ) அரைவட்ட வடிவம் இ) சதுர வடிவம் ஈ) இவை அனைத்தும்



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com
CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

23. I நீளமுள்ள கம்பி ஒன்றின் வழியே Y திசையில் I மின்னோட்டம் பாய்கிறது. இக்கம்பியை $\vec{B} = \beta/\sqrt{3}\,(\hat{i} + \hat{j} + \hat{k})$ என்ற காந்தப்புலத்தில் வைக்கும்போது, அக்கம்பியின் மீது செயல்படும் லாரன்ஸ் விசையின் எண்மதிப்பு
அ) $\sqrt{\frac{2}{3}}\beta I l$ ஆ) $\sqrt{\frac{1}{3}}\beta I l$ இ) $\sqrt{2}\beta I l$ ஈ) $\sqrt{\frac{1}{3}}\beta I l$

24. q மின்னூட்டமும், m நிறையும் மற்றும் r ஆரமும் கொண்ட மின்கடத்தாவளையம் ஒன்று ω என்ற சீரான கோணவேகத்தில் சுழற்றப்படுகிறது எனில், காந்தத் திருப்புத்திறனுக்கும் கோண உந்தத்திற்கும் உள்ள விகிதம் என்ன?
அ) $\frac{q}{m}$ ஆ) $\frac{2q}{m}$ இ) $\frac{q}{2m}$ ஈ) $\frac{q}{4m}$

25. இரண்டு குட்டையான சட்ட காந்தங்களின் காந்தத் திருப்புத்திறன்கள் முறையே $1.20\,Am^2$ மற்றும் $1.00\,Am^2$ ஆகும். இவை ஒன்றுக்கொன்று இணையாக உள்ளவாறு அவற்றின் வடமுனை, தென்திசையை நோக்கி இருக்கும்படி கிடைத்தள மேசை மீது வைக்கப்பட்டுள்ளன. இவ்விரண்டு குட்டை காந்தங்களுக்கும் காந்த நடுவரை பொதுவானதாகும். மேலும் அவை 20.0 cm தொலைவில் பிரித்து வைக்கப்பட்டுள்ளன. இவ்விரண்டு காந்த மையங்களையும் இணைக்கும் கோட்டின் நடுவே O புள்ளியில் ஏற்படும் நிகர காந்தப்புலத்தின் கிடைத்தள மதிப்பு என்ன? (புவிக் காந்தப்புலத்தின் கிடைத்தள மதிப்பு $3.6 \times 10^{-5}\,Wb\,m^{-2}$)
அ) $3.60 \times 10^{-5}\,Wb\,m^{-2}$ ஆ) $3.5 \times 10^{-5}\,Wb\,m^{-2}$ இ) $2.56 \times 10^{-4}\,Wb\,m^{-2}$ ஈ) $2.2 \times 10^{-4}\,Wb\,m^{-2}$

26. புவி காந்தப்புலத்தின் செங்குத்துக்கூறும், கிடைத்தளக் கூறும் சமமதிப்பைப் பெற்றுள்ள இடத்தின் சரிவுக் கோணத்தின் மதிப்பு?
அ) $30^o$ ஆ) $45^o$ இ) $60^o$ ஈ) $90^o$

27. R ஆரமும், σ பரப்பு மின்னூட்ட அடர்த்தியும் கொண்ட மின்காப்புப் பெற்ற தட்டு அதன் பரப்பின்மீது அதிகப்படியான மின்னூட்டங்களைப் பெற்றுள்ளது. தட்டின் பரப்பிற்கு செங்குத்தாக உள்ள அச்சைப் பொறுத்து ω என்ற கோண திசைவேகத்துடன் இது சுற்றுகிறது. சுழலும் அச்சுக்கு செங்குத்தான திசையில் செயல்படும் B வலிமை கொண்ட காந்தப்புலத்திற்கு நடுவே இத்தகடு சுழன்றால், அதன்மீது செயல்படும் திருப்புத்திறனின் எண்மதிப்பு என்ன? அ) $\frac{1}{4}\sigma\omega\pi BR$ ஆ) $\frac{1}{4}\sigma\omega\pi BR^2$ இ) $\frac{1}{4}\sigma\omega\pi BR^3$ ஈ) $\frac{1}{4}\sigma\omega\pi BR^4$

28. $\vec{P}_m = (-0.5\hat{i} + 0.4\hat{j})\,Am^2$ என்ற வெக்டர் மதிப்புடைய காந்த இருமுனையானது $\vec{B} = 0.2\,\hat{i}\,T$ என்ற சீரான காந்தப்புலத்தில் வைக்கப்பட்டால் அதன் நிலையாற்றல் மதிப்பு அ) - 0.1 J ஆ) - 0.8 J இ) 0.1 J ஈ) 0.8 J

29. t என்ற கணத்தில், ஒரு சுருளோடு தொடர்புடைய பாயம் $\phi_B = 10t^2 - 50t + 250$ என உள்ளது. t = 3 s இல் தூண்டப்பட்ட மின்னியக்கு விசையானது அ) - 190 V ஆ) - 10 V இ) 10 V ஈ) 190 V

30. மின்னோட்டமானது 0.05 s நேரத்தில் + 2A லிருந்து -2A ஆக மாறினால், சுருளில் 8 V மின்னியக்கு விசை தூண்டப்படுகிறது. சுருளின் தன்மின்தூண்டல் எண் அ) 0.2 H ஆ) 0.4 H இ) 0.8 H ஈ) 0.1 H

31. $4\,cm^2$ குறுக்குவெட்டுப்பரப்பு கொண்ட ஒரு வட்ட கம்பிச்சுருள் 10 சுற்றுகளைக் கொண்டுள்ளது. அது சென்டிமீட்டருக்கு 15 சுற்றுகள் மற்றும் $10\,cm^2$ குறுக்கு வெட்டுப்பரப்பு கொண்ட ஒரு 1 m நீண்ட வரிச்சுருளின் மையத்தில் வைக்கப்பட்டுள்ளது. கம்பிச்சுருளின் அச்சானது வரிச்சுருளின் அச்சுடன் பொருந்துகிறது. அவற்றின் பரிமாற்று மின்தூண்டல் எண் யாது?
அ) 7.54 μH ஆ) 8.54 μH இ) 9.54 μH ஈ) 10.54 μH

32. ஒரு மின்மாற்றியில் முதன்மை மற்றும் துணைச் சுற்றுகளில் முறையே 410 மற்றும் 1230 சுற்றுகள் உள்ளன. முதன்மைச் சுருளில் உள்ள மின்னோட்டம் 6 A எனில், துணைச்சுருளின் மின்னோட்டமானது அ) 2 A ஆ) 18 A இ) 12 A ஈ) 1 A

33. ஒரு இறக்கு மின்மாற்றி மின்மூலத்தின் மின்னழுத்த வேறுபாட்டை 220 V இல் இருந்து 11 V ஆகக் குறைக்கிறது மற்றும் மின்னோட்டத்தை 6 A இல் இருந்து 100 A ஆக உயர்த்துகிறது. அதன் பயனுறுதிறன் அ) 1.2 ஆ) 0.83 இ) 0.12 ஈ) 0.9

34. ஒரு மின்சுற்றில் R, L, C மற்றும் AC மின்னழுத்த மூலம் ஆகிய அனைத்தும் தொடராக இணைக்கப்பட்டுள்ளன. L ஆனது சுற்றிலிருந்து நீக்கப்பட்டால், மின்முத்த வேறுபாடு மற்றும் மின்னோட்டம் இடையே உள்ள கட்ட வேறுபாடு $\pi/3$ ஆகும். மாறாக, C ஆனது நீக்கப்பட்டால், கட்ட வேறுபாடானது மீண்டும் $\pi/3$ என உள்ளது. சுற்றின் திறன் காரணி அ) $\frac{1}{2}$ ஆ) $\frac{1}{\sqrt{2}}$ இ) 1 ஈ) $\frac{\sqrt{3}}{2}$

35. ஒரு தொடர் RL சுற்றில், மின்தடை மற்றும் மின்தூண்டல் மின்மறுப்பு இரண்டும் சமமாக உள்ளன. சுற்றில் மின்னழுத்த வேறுபாடு மற்றும் மின்னோட்டம் இடையே உள்ள கட்ட வேறுபாடு அ) $\frac{\pi}{4}$ ஆ) $\frac{\pi}{2}$ இ) $\frac{\pi}{6}$ ஈ) சுழி

36. ஒரு தொடர் RLC சுற்றில், 100Ω மின்தடைக்குக் குறுக்கே உள்ள மின்னழுத்த வேறுபாடு 40 V ஆகும். ஒத்ததிர்வு அதிர்வெண் ω ஆனது 250 rad/s. C இன் மதிப்பு 4 μF எனில், L க்கு குறுக்கே உள்ள மின்னழுத்த வேறுபாடு
அ) 600 V ஆ) 4000 V இ) 400 V ஈ) 1 V

37. ஒரு 20 mH மின்தூண்டி, 50 μF மின்தேக்கி மற்றும் 40Ω மின்தடை ஆகியவை ஒரு மின்னியக்கு விசை v = 10 sin 340 t கொண்ட மூலத்துடன் தொடராக இணைக்கப்பட்டுள்ளன. AC சுற்றில் திறன் இழப்பு அ) 0.76 W ஆ) 0.89 W இ) 0.46 W ஈ) 0.67 W

38. ஒரு சுற்றில் மாறுதிசை மின்னோட்டம் மற்றும் மின்னழுத்த வேறுபாட்டின் கண நேர மதிப்புகள் முறையே $i = \frac{1}{\sqrt{2}}\sin(100\pi t)$ A மற்றும் $V = \frac{1}{\sqrt{2}}\sin(100\pi t + \pi/3)$ V ஆகும். சுற்றில் நுகரப்பட்ட சராசரித் திறன் (வாட் அலகில்)
அ) $\frac{1}{4}$ ஆ) $\frac{\sqrt{3}}{4}$ இ) $\frac{1}{2}$ ஈ) $\frac{1}{8}$

39. ஒரு அலைவுறும் LC சுற்றில் மின்தேக்கியில் உள்ள பெரும மின்னூட்டம் Q ஆகும். ஆற்றலானது மின்மற்றும் காந்தப்புலங்களில் சமமாக சேமிக்கப்படும் போது, மின்னூட்டத்தின் மதிப்பு அ) $\frac{Q}{2}$ ஆ) $\frac{Q}{\sqrt{3}}$ இ) $\frac{Q}{\sqrt{2}}$ ஈ) Q

40. $1/\varepsilon_0\mu_0$ இன் பரிமாணம் அ) $[LT^{-1}]$ ஆ) $[L^2T^{-2}]$ இ) $[L^{-1}T]$ ஈ) $[L^{-2}T^2]$

41. மின்காந்த அலை ஒன்றின் காந்தப்புலத்தின் எண்மதிப்பு $3 \times 10^{-6}$ T எனில், அதன் மின்புலத்தின் மதிப்பு என்ன?
அ) $100\,V\,m^{-1}$ ஆ) $300\,V\,m^{-1}$ இ) $600\,V\,m^{-1}$ ஈ) $900\,V\,m^{-1}$

42. எந்த மின்காந்த அலையைப் பயன்படுத்தி மூடுபனியின் வழியே பொருட்களைக் காண இயலும்?
அ) மைக்ரோ அலை ஆ) காமாக்கதிர்வீச்சு இ) X -கதிர்கள் ஈ) அகச்சிவப்புக்கதிர்கள்

43. மின்காந்த அலைகளைப் பொறுத்து பின்வருவனவற்றுள் எவை தவறான கூற்றுகளாகும்?
அ) குறுக்கலை ஆ) இயந்திர அலைகள் அல்ல
இ) நெட்டலை ஈ) முடுக்கப்பட்ட மின்துகள்களினால் உருவாக்கப்படுகின்றன

44. அலையியற்றி ஒன்றைக் கருதுக. அதில் உள்ள மின்னூட்டப்பட்டத் துகளொன்று அதன் சராசரிப் புள்ளியைப் பொறுத்து 300 MHz அதிர்வெண்ணில் அலைவுகிறது எனில், அலையியற்றியால் உருவாக்கப்பட்ட மின்காந்த அலையின் அலைநீளத்தின் மதிப்பு
அ) 1 m ஆ) 10 m இ) 100 m ஈ) 1000 m

45. வெற்றிடத்தில் பரவும் மின்காந்த அலை ஒன்றின் மின்புலத்தின் சராசரி இருமடிமூல மதிப்பு (rms) $3\,V\,m^{-1}$ எனில் காந்தப்புலத்தின் உச்சமதிப்பு என்ன? அ) $1.414 \times 10^{-8}$ T ஆ) $1.0 \times 10^{-8}$ T இ) $2.828 \times 10^{-8}$ T ஈ) $2.0 \times 10^{-8}$ T

46. $\vec{v} = v\hat{i}$ என்ற திசைவேகத்துடன் மின்காந்த அலை ஒரு ஊடகத்தில் பரவுகின்றது. இவ்வலையின் மாறுதிசை மின்புலம் +y - அச்சின் திசையில் இருந்தால், அதன் மாறுதிசை காந்தப்புலம் -------- இருக்கும்.
அ) -y திசையில் ஆ) -x திசையில் இ) + z திசையில் ஈ) -z திசையில்



CamScanner

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

47. பிரான்ஹோபர் வரிகள் எவ்வகை நிறமாலைக்கு எடுத்துக்காட்டு?
அ) வரி வெளியிடு ஆ) வரி உட்கவர் இ) பட்டை வெளியிடு ஈ) பட்டை உட்கவர்

48. பின்வருவனவற்றுள் எது மின்காந்த அலையாகும்?
அ) $\alpha$−கதிர்கள் ஆ) $\beta$−கதிர்கள் இ) $\gamma$−கதிர்கள் ஈ) இவை அனைத்தும்

49. ஒரு சமதள மின்காந்த அலையின் மின்புலம் $E = E_0 \sin [10^6 x - \omega t]$ எனில் $\omega$ வின் மதிப்பு என்ன?
அ) $0.3 \times 10^{-14}$ rad $s^{-1}$ ஆ) $3 \times 10^{-14}$ rad $s^{-1}$ இ) $0.3 \times 10^{14}$ rad $s^{-1}$ ஈ) $3 \times 10^{14}$ rad $s^{-1}$

50. மின்காந்த அலையின் மின்புலம் மற்றும் காந்தப்புலங்கள் அ) ஒரே கட்டத்தில் உள்ளன. மேலும் ஒன்றுக்கொன்று செங்குத்து
ஆ) ஒரே கட்டத்தில் இல்லை. மேலும் ஒன்றுக்கொன்று செங்குத்து இல்லை.
இ) ஒரே கட்டத்தில் உள்ளன. மேலும் ஒன்றுக்கொன்று செங்குத்து இல்லை
ஈ) ஒரே கட்டத்தில் இல்லை. மேலும் ஒன்றுக்கொன்று செங்குத்து

51. திசையொப்பு பண்பினைப் பெற்ற ஊடகத்தின் வழியே செல்லும் ஒளியின் வேகம், பின்வருவனவற்றுள் எதனைச் சார்ந்தது?
அ) அதன் ஒளிச்செறிவு ஆ) அதன் அலைநீளம்
இ) பரவும் தன்மை ஈ) ஊடகத்தைப் பொருத்து ஒளிமூலத்தின் இயக்கம்

52. 10 cm நீளமுடைய தண்டு ஒன்று, 10 cm குவியத்தூரம் கொண்ட குழி ஆடியின் முதன்மை அச்சில் வைக்கப்பட்டுள்ளது. தண்டின் ஒரு முனை குழி ஆடியின் முனையிலிருந்து 20 cm தொலைவில் இருந்தால், கிடைக்கும் பிம்பத்தின் நீளம் என்ன?
அ) 2.5 cm ஆ) 5 cm இ) 10 cm ஈ) 15 cm

53. குவியத்தூரம் f கொண்ட குவிஆடியின் முன்பாக பொருளொன்று வைக்கப்பட்டுள்ளது. பெரிதாக்கப்பட்ட மெய் பிம்பம் கிடைக்க வேண்டுமெனில், குவி ஆடியிலிருந்து பொருளை வைக்க வேண்டிய பெரும மற்றும் சிறுமத் தொலைவுகள் யாவை?
அ) 2f மற்றும் ஆ) c மற்றும் $\infty$ இ) f மற்றும் 0 ஈ) எதுவுமில்லை

54. காற்றிலிருந்து ஒளிவிலகல் எண் 2 கொண்ட கண்ணாடிப் பெட்டகத்தின் மீது ஒளி விழுகிறது எனில், சாத்தியமான பெரும விலகுகோணத்தின் மதிப்பு என்ன? அ) $30^\circ$ ஆ) $45^\circ$ இ) $60^\circ$ ஈ) $90^\circ$

55. காற்றில், ஒளியின் திசைவேகம் மற்றும் அலைநீளம் முறையே $V_a$ மற்றும் $\lambda_a$. இதே போன்று தண்ணீரில் $V_w$ மற்றும் $\lambda_w$ எனில், தண்ணீரின் ஒளிவிலகல் எண் என்ன? அ) $\frac{V_w}{V_a}$ ஆ) $\frac{V_a}{V_w}$ இ) $\frac{\lambda_w}{\lambda_a}$ ஈ) $\frac{V_a}{V_w} \frac{\lambda_a}{\lambda_w}$

56. பின்வருவனவற்றுள் விண்மீன்கள் மின்னுவதற்கான சரியாக காரணம் எது?
அ) ஒளிஎதிரொளிப்பு ஆ) முழு அக எதிரொளிப்பு இ) ஒளி விலகல் ஈ) தளவிளைவு

57. தட்டைக் குவிலென்ஸ் ஒன்றின் வளைப்பரப்பின் வளைவு ஆரம் 10 cm. மேலும் அதன் ஒளிவிலகல் எண் 1.5. குவிலென்சின் தட்டைப்பரப்பின் மீது வெள்ளி பூசப்பட்டால் அதன் குவியத்தூரம் அ) 5 cm ஆ) 10 cm இ) 15 cm ஈ) 20 cm

58. ஒளி விலகல் 1.5 எண் கொண்ட கண்ணாடிப் பட்டகம் ஒன்றினுள் காற்றுக் குமிழ் ஒன்று உள்ளது. (செங்குத்துப் படுகதிர் நிலைக்கு அருகில்) ஒரு பக்கத்திலிருந்து பார்க்கும்போது, காற்றுக்குமிழ் 5 cm ஆழத்திலும், மற்றொரு பக்கம் வழியாக பார்க்கும்போது 3 cm ஆழத்திலும் உள்ளது. எனில், கண்ணாடிப் பட்டகத்தின் தடிமன் என்ன? அ) 8 cm ஆ) 10 cm இ) 12 cm ஈ) 16 cm

59. பல்வேறு வண்ணங்களில் எழுதப்பட்ட எழுத்துக்களின் மீது (ஊதா, பச்சை, மஞ்சள் மற்றும் சிவப்பு) சமதளக் கண்ணாடி ஒன்று வைக்கப்பட்டுள்ளது. எந்த வண்ணத்தில் எழுதப்பட்ட எழுத்து அதிக உயரத்தில் தெரியும்? அ) சிவப்பு ஆ) மஞ்சள் இ) பச்சை ஈ) ஊதா

60. கருமை நிறத் தாளின் மீது 1 mm இடைவெளியில் இரண்டு வெள்ளை நிறப் புள்ளிகள் காணப்படுகின்றன. தோராயமாக 3 mm விட்டமுடைய விழிலென்ஸ் உள்ள விழியினால் இப்புள்ளிகள் பார்க்கப்படுகின்றன. விழியினால் இப்புள்ளிகளைத் தெளிவாகப் பகுத்துப் பார்க்ககூடிய பெருமத் ,தொலைவு என்ன? (பயன்படும் ஒளியின் அலைநீளம்=500 nm) அ) 1 m ஆ) 5 m இ) 3 m ஈ) 6 m

61. யங் இரட்டைப் பிளவு ஆய்வில், பிளவுகளுக்கு இடையே உள்ள தொலைவு இருமடங்காக்கப்படுகிறது. திரையில் தோன்றும் பட்டை அகலம் மாறாமல் இருக்க வேண்டுமெனில், பிளவுகளுக்கும் திரைக்கும் இடையே உள்ள தொலைவு எவ்வளவு இருக்க வேண்டும்?
அ) 2D ஆ) $D/2$ இ) $\sqrt{2}D$ ஈ) $D/\sqrt{2}$

62. I மற்றும் 4I ஒளிச்செறிவுகள் கொண்ட இரண்டு ஒற்றை நிற ஓரியல் ஒளிக்கற்றைகளை ஒன்றுடன் ஒன்று மேற்பொருந்துகின்றன. தொகுபயன் பிம்பத்தின் சாத்தியமான பெரும மற்றும் சிறும ஒளிச்செறிவுகள் முறையே,
அ) 5I மற்றும் I ஆ) 5I மற்றும் 3I இ) 9I மற்றும் I ஈ) 9I மற்றும் 3I

63. $5 \times 10^{-5}$ cm தடிமன் கொண்ட சோப்புப் படலத்தின் மீது ஒளி விழுகிறது. கண்ணுறு பகுதியில் எதிரொளிப்பு அடைந்த ஒளியின் பெரும அலைநீளம் 5320 Å எனில், சோப்பு படலத்தின் ஒளிவிலகல் எண் என்ன? அ) 1.22 ஆ) 1.33 இ) 1.51 ஈ) 1.83

64. $1.0 \times 10^{-5}$ cm அகலம் கொண்ட ஒற்றைப் பிளவினால் ஏற்படும் விளிம்புவிளைவின் முதல் சிறுமம் $30^\circ$ எனில், பயன்படுத்தப்படும் ஒளியின் அலைநீளம் என்ன? அ) 400 Å ஆ) 500 Å இ) 600 Å ஈ) 700 Å

65. கண்ணாடித் தட்டு ஒன்றின் மீது $60^\circ$ கோணத்தில் ஒளிக்கதிர் விழுகிறது. எதிரொளிப்பு மற்றும் ஒளிவிலகல் அடைந்த ஒளிக்கதிர்கள் இரண்டும் ஒன்றுக்கொன்ற செங்குத்தாக அமைந்தால், கண்ணாடியின் ஒளிவிலகல் எண் எவ்வளவு?
அ) $\sqrt{3}$ ஆ) $3/2$ இ) $\sqrt{3/2}$ ஈ) 2

66. ஒளியின் குறுக்கீட்டுப் பண்பினை வெளிப்படுத்தும் நிகழ்வு
அ) குறுக்கீட்டு விளைவு ஆ) விளிம்பு விளைவு இ) ஒளிச்சிதறல் ஈ) தளவிளைவு

67. $\lambda_e$ அலைநீளம் கொண்ட எலக்ட்ரான் மற்றும் $\lambda_p$ கொண்ட ஃபோட்டான் ஆகியவை ஒரே ஆற்றலைப் பெற்று இருப்பின், அலைநீளங்கள் $\lambda_e$ மற்றும் $\lambda_p$ இடையிலான தொடர்பு அ) $\lambda_p \alpha \lambda_e$ ஆ) $\lambda_p \alpha \sqrt{\lambda_e}$ இ) $\lambda_p \alpha 1/\sqrt{\lambda}$ ஈ) $\lambda_p \alpha \lambda_e$

68. எலக்ட்ரான் நுண்ணோக்கியில் பயன்படும் எலக்ட்ரான் 14 kV மின்னழுத்த வேறுபாட்டில் முடுக்கப்படுகின்றன. இந்த மின்னழுத்த வேறுபாடு 224 kV ஆக அதிகரிக்கும்போது, எலக்ட்ரானின் டி ப்ராய் அலைநீளமானது அ) 2 மடங்கு அதிகரிக்கும் ஆ) 2 மடங்கு குறையும்
இ) 4 மடங்கு குறையும் ஈ) 4 மடங்கு அதிகரிக்கும்

69. நிறை கொண்ட துகளுடன் தொடர்புடைய அலையின் அலைநீளம் மற்றும் திசைவேகத்தில் நகரும் எலக்ட்ரானின் அலைநீளம் ஆகியவை சமமாக இருப்பின், துகளின் திசைவேகம் அ) $1.82 \times 10^{-18}$ m $s^{-1}$ ஆ) $9 \times 10^{-2}$ m $s^{-1}$ இ) $3 \times 10^{-31}$ m $s^{-1}$ ஈ) $1.82 \times 10^{-15}$ m $s^{-1}$

70. அலைநீளமுள்ள கதிர்வீச்சினால் ஒரு உலோகப் பரப்பு ஒளியூட்டப்படும் போது, அதன் நிறுத்து மின்னழுத்தம் ஆகும். அலைநீளமுள்ள ஒளியினால் அதே பரப்பு ஒளியூட்டப்பட்டால், நிறுத்து மின்னழுத்தம் ஆகும். அந்த உலோகப்பரப்பிற்கான பயன்தொடக்க அலைநீளம்
அ) $4\lambda$ ஆ) $5\lambda$ இ) $\frac{5}{2}\lambda$ ஈ) $3\lambda$

71. ஒளி உணர் பரப்பு என்று அடுத்தடுத்து $\lambda$ மற்றும் $\lambda/2$ அலைநீளம் கொண்ட ஒற்றை நிற ஒளியால் ஒளியூட்டப்படுகிறது. இரண்டாவது நேர்வில் உமிழப்படும் எலக்ட்ரானின் பெரும இயக்க ஆற்றல் ஆனது முதல் நேர்வில் உமிழப்படும் எலக்ட்ரானின் பெரும இயக்க ஆற்றலை விட 3 மடங்காக இருப்பின், உலோகத்தின் வெளியேற்று ஆற்றலானது, அ) $\frac{hc}{\lambda}$ ஆ) $\frac{2hc}{\lambda}$ இ) $\frac{hc}{3\lambda}$ ஈ) $\frac{hc}{2\lambda}$

72. ஒளியின் உமிழ்வு நிகழ்வில், ஒரு குறிப்பிட்ட உலோகத்தின் பயன்தொடக்க அதிர்வெண்ணை விட 4 மடங்கு அதிர்வெண் கொண்ட கதிர்வீச்சு அந்த உலோகப்பரப்பில் படும்போது, வெளிப்படும் எலக்ட்ரானின் பெரும திசைவேகமானது ____
அ) $\sqrt{\frac{hv_o}{m}}$ ஆ) $\sqrt{\frac{6hv_o}{m}}$ இ) $2\sqrt{\frac{hv_o}{m}}$ ஈ) $\sqrt{\frac{hv_o}{2m}}$



CamScanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

73. 0.9 eV மற்றும் 3.3 eV ஃபோட்டான் ஆற்றல் கொண்ட இரண்டு கதிர்வீச்சுகள் ஒரு உலோகப்பரப்பின் மீது அடுத்தடுத்து விழுகின்றன. உலோகத்தின் வெளியேற்று ஆற்றல் 0.6 eV எனில், இரு நேர்வுகளில் வெளிவிடப்படும் எலக்ட்ரான்களின் பெரும வேகங்களின் தகவு
அ) 1:4 ஆ) 1:3 இ) 1:1 ஈ) 1:9

74. ஒளியின் வெளியேற்று ஆற்றல் 3.313 eV கொண்ட ஒரு உலோகப்பரப்பின் பயன் தொடக்க அலைநீளம்
அ) 4125 Å ஆ) 3750 Å இ) 6000 Å ஈ) 20625 Å

75. A, B மற்றும் C என்னும் உலோகங்களின் வெளியேற்று ஆற்றல்கள் முறையே 1.92 eV, 2.0 eV மற்றும் 5.0 eV ஆகும். 4100 Å அலைநீளம் கொண்ட ஒளி படும்போது, ஒளி எலக்ட்ரான்களை உமிழும் உலோகம் / உலோகங்கள்.
அ) A மட்டும் ஆ) A மற்றும் B இரண்டும் இ) அனைத்து உமிழும் ஈ) ஏதுமில்லை

76. வெப்ப ஆற்றலை உட்கவர்வதால் எலக்ட்ரான்கள் உமிழப்படுவது ------ உமிழ்வு எனப்படும்.
அ) ஒளியின் ஆ) புல இ) வெப்ப அயனி ஈ) இரண்டாம் நிலை

77. ஹைட்ரஜன் அணுவில் நான்காவது சுற்றுப்பாதையில் இயங்கும் எலக்ட்ரானின் கோண உந்தம்
அ) h ஆ) $\frac{h}{\pi}$ இ) $\frac{4h}{\pi}$ ஈ) $\frac{2h}{\pi}$

78. n=1 சுற்றுப்பாதைக்கு அயனியாக்க அழுத்தம் 122.4 V கொண்ட அணுவின் அணு எண்,
அ) 1 ஆ) 2 இ) 3 ஈ) 4

79. ஹைட்ரஜன் அணுவின் முதல் மூன்று சுற்றுப்பாதையின் ஆரங்களின் விகிதம்
அ) 1:2:3 ஆ) 2:4:6 இ) 1:4:9 ஈ) 1:3:5

80. கேதோடு கதிர்களின் மின்னூட்டம் அ) நேர்குறி ஆ) எதிர்குறி இ) நடுநிலை ஈ) வரையறுக்கப்படவில்லை

81. J. J. தாம்சனின் e/m ஆய்வில், எலக்ட்ரான் கற்றைக்குப் பதிலாக மியூவான் (இது எலக்ட்ரான் மின்னூட்ட மதிப்பையும், எலக்ட்ரானைப் போல 208 மடங்கு நிறையும் கொண்ட ஒரு துகள்) கற்றையைப் பயன்படுத்தும்போது சுழி விலக்கத்திற்கான நிபந்தனையை அடைய
அ) B ன் மதிப்பு 208 மடங்கு அதிகரிக்கப்பட வேண்டும். ஆ) B ன் மதிப்பு 208 மடங்கு குறைக்கப்பட வேண்டும்.
இ) B ன் மதிப்பு 14.4 மடங்கு அதிகரிக்கப்பட வேண்டும். ஈ) B ன் மதிப்பு 14.4 மடங்கு குறைக்கப்பட வேண்டும்.

82. $Li^{++}$, $He^{+}$ மற்றும் H ஆகியவற்றில் n=2 லிருந்து n=1 க்கு நகர்வு ஏற்படும்போது உமிழப்படும் அலைநீளங்களின் விகிதம்
அ) 1:2:3 ஆ) 1:4:9 இ) 3:2:1 ஈ) 4:9:36

83. ஒரு புரோட்டான் மற்றும் ஒரு எலக்ட்ரானின் மின்னழுத்தம் $V = V_0 \ln [r/r_0]$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது. (இங்கு $r_0$ ஒரு மாறிலி) மின்னழுத்தத்திற்கு போர் அணு மாதிரியைப் பயன்படுத்தினால், முதன்மை குவாண்டம் எண் n-ஐப் பொறுத்து n-ஆவது சுற்றுப்பாதை $r_n$ ன் மாறுபாட்டின் தன்மை
அ) $r_n \alpha \, 1/n$ ஆ) $r_n \alpha \, n$ இ) $r_n \alpha \, 1/n^2$ ஈ) $r_n \alpha \, n^2$

84. $^{27}Al$ அணுக்கரு ஆரம் 3.6 பெர்மி எனில், $^{64}Cu$ அணுக்கரு ஆரம் ஏறக்குறைய அ) 2.4 ஆ) 1.2 இ) 4.8 ஈ) 3.6

85. அணுக்கரு கிட்டத்தட்ட கோள வடிவம் கொண்டது எனில், நிறை எண் A கொண்ட அணுக்கரு ஒன்றின் பரப்பு எவ்வாறு மாறுபடும்?
அ) $A^{2/3}$ ஆ) $A^{4/3}$ இ) $A^{1/3}$ ஈ) $A^{5/3}$

86. t = 0 நேரத்தில் அமைப்பு ஒன்றிலுள்ள அணுக்கருக்களின் எண்ணிக்கை $N_0$ அரை ஆயுட்காலம் பாதியளவு காலம் ($t = \frac{1}{2} T_{\frac{1}{2}}$) ஆகும்போது உள்ள அணுக்கருவின் எண்ணிக்கை அ) $\frac{N_0}{2}$ ஆ) $\frac{N_0}{\sqrt{2}}$ இ) $\frac{N_0}{4}$ ஈ) $\frac{N_0}{8}$

87. ஒரு சிலிக்கான் டையோடின் மின்னழுத்த அரண் (தோராயமாக) அ) 0.7 V ஆ) 0.3 V இ) 2.0 V ஈ) 2.2 V

88. ஒரு குறைகடத்தியில் மாசூட்டலின் விளைவாக
அ) இயங்கும் மின்னூட்ட ஊர்திகள் குறையும் ஆ) வேதிப்பண்புகளில் மாற்றம் ஏற்படும்
இ) படிக அமைப்பில் மாற்றம் ஏற்படும் ஈ) சகப்பிணைப்பு முறியும்

89. சார்பளிக்கப்படாத p-n சந்தியில், p-பகுதியில் உள்ள பெரும்பான்மை மின்னூட்ட ஊர்திகள் (அதாவது, துளைகள்) n-பகுதிக்கு விரவல் அடைவதற்கு காரணம்
அ) p-n சந்தியின் குறுக்கே உள்ள மின்னழுத்த வேறுபாடு ஆ) n-பகுதியில் உள்ளதைவிட, p-பகுதியில் உள்ள அதிக துளை செறிவு
இ) n-பகுதியில் உள்ள கட்டுறா எலக்ட்ரான்களின் கவர்ச்சி ஈ) p-பகுதியில் உள்ளதைவிட, n-பகுதியில் உள்ள எலக்ட்ரான்களின் அதிக செறிவு

90. ஓர் நேர் அரை அலைதிருத்தியில் திருத்தப்பட்ட மின்னழுத்தம் ஒரு பளு மின்தடைக்கு அளிக்கப்பட்டால், உள்ளீடு சைகை மாறுபாட்டின் எந்தப் பகுதியில் பளு மின்னோட்டம் பாயும்? அ) 0° - 90° ஆ) 90° - 180° இ) 0° - 180° ஈ) 0° - 360°

91. செனார் டையோடின் முதன்மைப் பயன்பாடு எது?
அ) அலைதிருத்தி ஆ) பெருக்கி இ) அலை இயற்றி ஈ) மின்னழுத்தச் சீரமைப்பான்

92. சூரிய மின்கலன் இந்தத்தத்துவத்தின் அடிப்படையில் செயல்படுகிறது.
அ) விரவல் ஆ) மறு இணைப்பு இ) ஒளி வோல்டா செயல்பாடு ஈ) ஊர்தியின் பாய்வு

93. ஓர் அலை இயற்றியில் தொடர்ச்சியான அலைவுகள் ஏற்பட
அ) நேர்பின்னூட்டம் இருக்க வேண்டும் ஆ) பின்னூட்டமாறிலி ஒன்றாக இருக்க வேண்டும்
இ) கட்டமாற்றம் சுழி அல்லது 2π யாக இருக்கவேண்டும் ஈ) மேற்கூறிய அனைத்தும்

94. ஒரு NOT கேட்டின் உள்ளீடு A = 1011 எனில், அதன் வெளியீடானது அ) 0100 ஆ) 1000 இ) 1100 ஈ) 0011

95. பண்பேற்றும் சைகையின் கணநேர வீச்சிற்கு ஏற்ப ஊர்தி அலையின் அதிர்வெண் மாற்றப்படுவது ------ எனப்படும்.
அ) வீச்சுப்பண்பேற்றம் ஆ) அதிர்வெண் பண்பேற்றம் இ) கட்டப்பண்பேற்றம் ஈ) துடிப்பு அகலபண்பேற்றம்

96. 3 MHz முதல் 30 MHz வரையிலான அதிர்வெண் நெடுக்கம் பயன்படுவது
அ) தரை அலைப்பரவல் ஆ) வெளி அலைப்பரவல் இ) வான் அலைப்பரவல் ஈ) செயற்கைக்கோள் தகவல் தொடர்பு

97. கீழ்க்கண்டவற்றுள் இயற்கையான நானோபொருள் எது?
அ) மயிலிறகு ஆ) மயில் அலகு இ) மணல் துகள் ஈ) திமிங்கலத்தின் தோல்

98. மிகவும் நிலைத்தன்மை கொண்ட செயற்கைப்பொருள் உருவாக்குவதற்கான திட்ட வரையறை எதனைப் பின்பற்றியது
அ) தாமரை இலை ஆ) மார்ஃபோபட்டாம்பூச்சி இ) கிளிமீன் ஈ) மயிலிறகு

99. எந்திரனியல் துறையில் பயன்படுத்தப்படும் பொருள்கள் அ) அலுமினியம் மற்றும் வெள்ளி ஆ) வெள்ளி மற்றும் தங்கம்
இ) தாமிரம் மற்றும் தங்கம் ஈ) எஃகு மற்றும் அலுமினியம்

100. புரோட்டான்கள் மற்றும் நியூட்ரான்களுக்கு நிறையை அளிக்கும் துகள்
அ) ஹிக்ஸ் துகள் ஆ) ஐன்ஸ்டீன் துகள் இ) நானோ துகள் ஈ) பேரளவு துகள்



CamScanner

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com